நாள்.03.03.2026

**அசல் வழக்கு எண். 263/2022**
**பெயர்.ராமசாமி**

**த.பெ.குழந்தைவேல்**

**வா.சா.1– பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தந்தை பெயர் ரா.வை.குழந்தைவேல் வேளாளர் என்றால் ஆமாம். என் தந்தைக்கு ராமசாமி, வைரவசுந்தரம், முருகையன் வாரிசுகள் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் முழு விஸ்திரணம் தெரியுமா என்றால் ச.எண்.30/2 ல் 94 செண்ட். நான் என்ன வேலை செய்துள்ளேன் என்றால் வேளாண்மை துறையில் விரிவாக்க பணியாளராக பணிபுரிந்தேன். எந்த வருடம் ஓய்வு பெற்றேன் என்றால் 2003 ல். நான் தற்போது பட்டுக்கோட்டையில் குடியிருக்கிறேன். எந்த வருடத்திலிருந்து என்றால் 1984 முதல் பட்டுக்கோட்டையில்தான் இருக்கிறேன். என் அப்பாவால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துகள் மற்றும் பூர்வீக சொத்துகளை பொறுத்து 28.11.1978 ல் ஒரு பதிவான பாக பத்திரம் ஏற்பட்டது என்றால் ஆமாம். அப்போது என் தந்தை உயிருடன் இருந்தார் என்றால் ஆமாம்.பாக பத்திரப்படி அ அட்டவணை சொத்துகள் என் தந்தைக்கும், ஆ பட்டி சொத்துகள் எனக்கும், சி பட்டி சொத்துகள் வைரவசுந்தரம், முருகையனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

வாதிகள் என் ஒன்றுவிட்ட பங்காளிகள்(2 தலைமுறைக்கு உள்ளவர்கள்) என்றால் உடன் பங்காளிகள். நான் தாக்கல் செய்துள்ள RSR, ROR ல் குறிப்பிடப்பட்டுள்ள உட்பிரிவுகள் மற்றும் அனுபவதாரர்கள் பெயர் சரியானது அல்ல என்றால் சரியாகதான் உள்ளது. UDR பதிவில் உள்ள புல எண், உட்பிரிவுகள்,அனுபவதாரர்கள் பெயர்கள் ஆவணத்திற்கும் அனுபவத்திற்கும் விரோதமானவை என்றால் சரியல்ல. எனது வழக்குரை பாரா 3 ல் என்னால் சொல்லப்பட்ட விஸ்திரணம் தவறு என்றால் இல்லை. புல எண்.30/2 எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது அதன் விஸ்திரணம் என்ன என்றால் 30/2 ல் 94 செண்ட், 30/2ல் 1 ல் ஞாபகமில்லை(சாட்சி மீண்டும் 20 ஏர்ஸ் என்று சொல்கிறார்), 30/2சி1 ல் 20 ஏர்ஸ், 30/2சி2 ல் 19 ஏர்ஸ். சரியாக ஞாபகமில்லை.

எனது வழக்குரை பாரா 5 ல் புல எண்.30/2 ல் 96 செண்டில் சின்னதம்பி, வைத்தியலிங்கம் கிரையம்பெற்ற 216 குழி போக மீதமுள்ள 66 குழி ராமசாமியின் வாரிசுகளாக அய்யாவு, சின்னதம்பி, மாணிக்கம், வைத்தியலிங்கம் ஆகியோர்களுக்கு தலா 16 1/2 குழி பாக பாத்தியம் உள்ளது என்று சொல்லியிருப்பது உண்மை அல்ல என்றால் சரியல்ல.

வைத்தியலிங்கத்தின் வாரிசுகளான குழந்தைவேல்,காத்தலிங்கமும் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதில் வாதியின் தந்தைக்கு 16 1/2 குழி ஒதுக்கப்பட்டதாக சொல்லியிருப்பது உண்மை அல்ல என்றால் சரியல்ல. அதுதான் உண்மை.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.